# கலைஞர்! ஆட்சியும் கல்வி மாட்சியும்



ஐந்து முறைகள் கலைஞர் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் கல்வி வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்; தரமான கல்வியை வழங்குதல் ஆகியவை நோக்கங்களாகக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் விளைவாகத் தமிழ்நாட்டில் மாணவர்களின் சேர்க்கை 46.9 விழுக்காடாக உள்ளது. அனைத்திந்திய அளவில் மாணவர்களின் சேர்க்கை 27.3 விழுக்காடு என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ்நாடு கண்டுள்ள கல்வி வளர்ச்சி புலப்படும்.

**பள்ளிக்கல்வி**

புதிய பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டன. சத்துணவில் முட்டை சேர்த்து உண்மையான சத்துணவாக மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. தற்போது காலைச் சிற்றுண்டியும் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்குப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. இவையெல்லாம் மாணவர் எண்ணிக்கையை அதிகப்படுத்த உதவின.

1970இல் தமிழ்நாடு பாடத்திட்டக்கழகம் தொடங்கப்பட்டது. தேர்வுகளைச் சிறப்பாக நடத்துவதற்காகத் தமிழ்நாடு தேர்வாணைய இயக்ககம் தொடங்கப்பட்டது. நூலக வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பொது நூலக இயக்ககம் தொடங்கப்பட்டது. 1969 முதல் N.S.S. என்ற நாட்டு நலப்பணித்திட்டம் பள்ளிகளில் தொடங்கப்பட்டது. 1999-2000 முதல் பள்ளிகளில் கணினிக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. 1972-73 முதல் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடநூல்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டில் பள்ளிகளில் மாநிலப் பாடத்திட்டம், மெட்ரிக்குலேசன் கல்வி, ஆங்கிலோஇந்தியன் கல்வி, ஓரியண்டல்கல்வி என்று நான்கு வகைக் கல்வித் திட்டங்கள் செயல்பாட்டில் இருந்தன. இதனால், வசதி படைத்தோருக்கு ஒரு வகைக் கல்வியும், ஏனையோருக்கு வேறு வகைக் கல்வியும் வழங்கப்படும் நிலை இருந்தது. இதை மாற்றி அனைவருக்கும் ஒரே வகையான பாடத்திட்டம் மூலம் கல்வி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2007இல் பேராசிரியர் முத்துக்குமரன் தலைமையில் அமைக்கப்பட்ட குழு அளித்த பரிந்துரையின்படி, 2010-2011ஆம் கல்வி ஆண்டிலிருந்து, சமச்சீர் கல்வித் திட்டம் முதல் மற்றும் ஆறாம் வகுப்பில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**உயர்கல்வி**

1967இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்பு உயர் கல்வி வளர்ச்சியில் வரவேற்கத்தக்க ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டது. 1966ல் தமிழ்நாட்டிலிருந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 109 தான். அவற்றில் அரசுக் கல்லூரிகள் 22; தனியார் கல்லூரிகள் 87. அந்தக் கல்லூரிகளில் படித்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1,3,1093 தான்!

அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் கல்லூரிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. உயர் நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள் பி.ஏ. படிக்க வேண்டும் என்றால் கூட சென்னை, மதுரை, திருச்சி, கோவை போன்ற பெருநகரங்களுக்குத்தான் போக வேண்டும். அப்படியே போனால் கூட கல்லூரியில் இடம் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. எனவே, மேற்படிப்புப் படிக்க விரும்பிய மாணவர்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளானார்கள். அவர்களுடைய இன்னலைப் போக்கும் வகையில் கலைஞர் புதிய கல்லூரிகளைத் தொடங்கிக் கல்லூரிகளின் எண்ணிக்கைகளைப் பெருக்க நடவடிக்கைகளை எடுத்தார்.

1969 முதல் 1976ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் அதற்கு முன்பு இல்லாத வகையில் 68 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், அடுத்தடுத்து கலைஞர் முதல்வராக இருந்த காலகட்டங்களில் புதிது புதிதாகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் திறக்கப்பட்டு 2010ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள் எண்ணிக்கை 587 ஆக உயர்ந்தது. அவற்றில் அரசுக் கல்லூரிகள் 62 பல்கலைக் கழகக் கல்லூரிகள் 9 அரசு உதவி பெறும் கல்லூரிகள் 133 சுயநிதிக் கல்லூரிகள் 383. அந்தக் கல்லூரிகளில் படித்த மாணவர்களின் எண்ணிக்கையும் 7,09,162 ஆக அதிகரித்தது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்பு 1968லேயே புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி கொண்டு வரப்பட்டது. அடுத்து கலைஞர் முதலமைச்சராக வந்த காலகட்டங்களில் பட்டப்படிப்பும் இலவசக் கல்வியாக்கப்பட்டது. 2010ல் அரசுக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பும் இலவசமாக்கப்பட்டது. மாணவர்களுக்குப் பேருந்துகளில் இலவசப் பயணச்சலுகையும் வழங்கப்பட்டது. மேலும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நகரங்களில் மட்டுமே கல்லூரிகள் இருந்தன என்ற நிலையை மாற்றிப் புதிய கல்லூரிகள் கிராமங்களிலும் தொடங்கப்பட்டன. அக்கல்லூரிகளில் பட்டமேற்படிப்பு வகுப்புகளும் தொடங்கப்பட்டன. இவை போன்ற பல்வேறு நடவடிக்கைகளை தி.மு.க. அரசு எடுத்ததால்தான் இன்று அதிக அளவில் மாணவர்கள் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கின்றனர்.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மட்டுமல்ல; பொறியியல் கல்லூரிகளும் தி.மு.க. ஆட்சியில் பிரமிக்கத்தக்க வளர்ச்சியைப் பெற்றன. 1966இல் தமிழ்நாட்டில் இருந்த பொறியியற் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 12 தான்! அவற்றில் அரசுக் கல்லூரிகள் 7 தனியார் கல்லூரிகள் 5 பல்தொழில்நுட்பப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 35 தான்! அவற்றில் அரசுப் பள்ளிகள் 25 தனியார் பள்ளிகள் 10. கல்வி நிலையங்கள் குறைவாக இருந்ததால் பொறியியல் படித்த மாணவர்களின் எண்ணிக்கையும் குறைவாக இருந்தது. உண்மையில் பொறியியல் கல்லூரியில் சேர்ந்து படிப்பது என்பது ஏழை எளிய மாணவர்களுக்கு எட்டாக் கனியாகவே இருந்தது. இந்நிலையில் தி.மு.க. அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாகப் பொறியியற் கல்லூரிகள் அதிக எண்ணிக்கையில் மாவட்டங்கள் தோறும் தொடங்கப்பட்டன. 2010இல் தமிழ்நாடு முழுவதும் 362 பொறியியற் கல்லூரிகள் செயல்பட்டு வந்தன. அவற்றில் சேர்ந்து படித்த மாணவர்களின் எண்ணிக்கையும் 1,18,565 ஆக உயர்ந்தது. இன்று தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க விண்ணப்பிக்கும் அனைவருக்கும் இடம் கிடைக்கும் அளவிற்கு நிலைமை முன்னேறி உள்ளது.



**பேராசிரியர் அ. இராமசாமி**
துணைத்தலைவர்
தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

பல்தொழில் நுட்பப் பள்ளிகளின் எண்ணிக்கையும் 2010இல் 324ஆக அதிகரித்துள்ளது. அதில் சேர்ந்து படித்த மாணவர்களின் எண்ணிக்கையும் 100977 ஆக உயர்ந்துள்ளது.

1966இல் தமிழ்நாட்டில் இருந்த மருத்துவக் கல்லூரிகள் மொத்தம் 9 தான்! அவற்றில் ஒன்று தனியார் கல்லூரி. மாவட்டங்கள் தோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் தி.மு.க. அரசு செயல்பட்டதால் 2010இல் எம்.பி.பி.எஸ். மற்றும் பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்லூரிகள் 17 ஆகவும், பி.டி.எஸ். செவிலியர் போன்ற இதர மருத்துவப் படிப்புக் கல்லூரிகள் 33 ஆகவும் அதிகரித்தன. 1966இல் ஒரே ஒரு சட்டக் கல்லூரிதான் தமிழ்நாட்டில் இருந்தது. 2010இல் எட்டு சட்டக் கல்லூரிகளாக அதிகரித்தது. அவற்றில் ஒன்று தனியார் கல்லூரி. 1966இல் தமிழ்நாட்டில் இருந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 9 தான்! 2010இல் அந்த எண்ணிக்கை 645 ஆக உயர்ந்தது. அதனால் அந்தக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்தது. வேளாண்மைக் கல்லூரி, கால்நடை, மருத்துவக் கல்லூரி போன்ற பல்வேறு படிப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

1997இல் உயர் கல்விக்கென்று தனியாக ஒரு துறையை உருவாக்கி உயர்கல்வியின் உன்னத வளர்ச்சிக்குப் பாடுபட்டது தி.மு.க. அரசுதான்! எனவே, ஆரம்பக் கல்விக்கு காமராசர், உயர் கல்விக்கு கலைஞர் என்று எதிர்கால வரலாறு போற்றும் அளவிற்கு உயர்கல்வி வளர்ச்சியில் சாதனை படைத்தது தி.மு.க. அரசுதான்!

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது அவரிடம் உயர்கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் க. அன்பழகன், டாக்டர் க. பொன்முடி ஆகிய இருவருமே கல்லூரியில் பேராசிரியர்களாகப் பணியாற்றிய அனுபவ மிக்கவர்கள். எனவே, உயர்கல்வி முறை அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதால், அதன் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தனர். அதிலும், 2006 முதல் 2011 வரையில் கலைஞர் ஐந்தாம் முறையாக முதலமைச்சராக இருந்த காலம். தமிழக உயர்கல்வி வரலாற்றில் ஒரு பொற்காலம் எனக் கூறலாம். அந்த அளவிற்கு கலைஞரின் அனுமதியைப் பெற்று டாக்டர் க.பொன்முடி உயர் கல்வியின் வளர்ச்சிக்குத் தேவையான பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தினார்.

பல்கலைக் கழகங்களில் காலியான துணைவேந்தர் பதவிகளை உடனுக்குடன் நிரப்பியது; பல்கலைக் கழகங்களுக்குத் தேவையான ஆசிரியர்களை நியமித்தது; ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை எல்லாம் இணைவித்து இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தனியாக ஒரு ஆசிரியர் பயிற்சிப் பல்கலைக் கழகம் தொடங்கியது; அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் தமிழக வரலாற்றில் முன்பு எப்போதும் இல்லாத வகையில், 6000 ஆசிரியர்களைப் பணி நியமனம் செய்தது; அவ்வாறு நியமிக்கப்பட்ட அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், ஒரு மாத காலம் ஊதியத்துடன் கூடிய பயிற்சி வழங்கியது (C.B.C.S.); விருப்பஞ் சார்ந்த தகுதிப் புள்ளிமுறை கொண்டு வந்தது; அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் ஆராய்ச்சி செய்ய ஊக்கத் தொகை வழங்கியது; பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு விருது, பண முடிப்பும் வழங்கிப் பாராட்டியது; அரசுக் கல்லூரிகளுக்கு வளாகச் சுவர்கள் எழுப்பி, அதற்கு முன்பு அங்கு பரவலாக நடைபெற்று வந்த சமூக விரோதச் செயல்களைத் தடுத்து நிறுத்தியது; வகுப்பறைகள் இல்லாமல் அவதிப்பட்ட அரசுக் கல்லூரிகளுக்குப் பல கோடி ரூபாய்களில் வகுப்பறைகள் கட்டிக் கொடுத்தது; பாதுகாப்பான சோதனைக் கூடங்கள் கட்டப் பெற்று கணினி மற்றும் சோதனைப் பொருட்கள் வாங்குவதற்குத் தேவையான நிதியளித்தது; நூலகங்கள் கட்டிக் கொடுத்தது; கல்லூரிகளில் காலியாக இருந்த நூலகர்கள், உடற்பயிற்சி, இயக்குநர்கள் ஆகியோரின் பணியிடங்களை நிரப்பியது போன்றவை உள்கட்டமைப்பைப் பெருக்கித் தரத்தை உயர்த்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும்.

அரசுக் கல்லூரிகளில் அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும் இலவசக் கல்வி வழங்கியது; கலைக் கல்லூரி மற்றும் பல்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டை வழங்கியது; பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு நடைபெற்று வந்த நுழைவுத் தேர்வை ஒழித்தது; பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில், மாணவர் சேர்க்கைக்கு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பெண்களைக் குறைத்தது; முதல் தலைமுறை மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கியது; அரசு சார்பில் புதிய மருத்துவக் கல்லூரிகள்; பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டது. கலைக் கல்லூரிகளில் சுழற்சி முறை கொண்டு வந்தது போன்ற நடவடிக்கைகளால் இலட்சக்கணக்கான மாணவர்கள் கலை மற்றும் தொழில் கல்லூரிகளில் சேர்ந்து பயின்றனர். பன்னிரண்டாம் வகுப்புத் தேறிய, மேற்படிப்பில் சேர்கின்ற மாணவர்களின் விழுக்காடு தமிழ்நாட்டில் அதிகரித்தது.


**விடுதலைக்குப் பின்பு பல்கலைக் கழகங்கள்**

1947 ஆகத்து 15ஆம் நாள் ஆங்கிலேயரிடமிருந்து இந்தியா விடுதலை பெற்றபோது, இந்தியாவில் இருந்த மொத்தப் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 20 ஆகும். தமிழ்நாட்டில் இருந்த பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 2 ஆகும். 1967இல் இந்தியாவில் 45 பல்கலைக் கழகங்கள் இருந்தன. தமிழ்நாட்டில் இரண்டே பல்கலைக் கழகங்கள்தான் தொடர்ந்து இருந்து வந்தன.

1971இல் இந்தியாவில் 83 பல்கலைக் கழகங்களும் தமிழ்நாட்டில் 4 பல்கலைக் கழகங்களும் இருந்தன. தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட அந்த நான்காவது பல்கலைக் கழகம், 1971 சூன் முதல் நாள் கோயம்புத்தூரில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமாகும். அந்தப் பல்கலைக் கழகத்தைக் கலைஞர்தான் தொடங்கி வைத்தார். அடுத்த ஆண்டு, கலைஞர் ஆட்சியில்தான் மதுரைக்கு அருகே நாகமலை அடிவாரத்தில் 750 ஏக்கர் விரிந்த பரப்பளவில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்ட புதிய கட்டடத்திற்கு மதுரைப் பல்கலைக் கழகம் இடம் மாற்றப்பட்டது.

கோவையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம், சென்னையில் கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம், நெல்லையில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், சேலத்தில் பெரியார் பல்கலைக் கழகம், சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம், கோவையில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், திருச்சியில் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், திருநெல்வேலியில் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், மதுரையில் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகம், சென்னையில் இன்னுமொரு அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், சென்னையில் ஆசிரியர் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், மத்திய அரசின் சர்பில் சென்னையில் கடல்சார் பல்கலைக் கழகம், திருவாரூரில் மத்திய பல்கலைக் கழகம், திருச்சியிலும் கோவையிலும் பல்கலைக் கழகங்களுக்கு நிகரான மத்திய கல்வி நிலையங்கள் ஆகியன தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டன.

இவ்வாறு, கலைஞர் எப்பொழுதெல்லாம் முதலமைச்சராக வருகின்றாரோ அப்பொழுதெல்லாம் உயர் கல்வி உன்னத வளர்ச்சியைப் பெற்றுத் திகழ்ந்தது! “ஆரம்பக் கல்விக்குக் காமராசர்; உயர்கல்விக்குக் கலைஞர்!” என்று எதிர்கால வரலாறு போற்றத்தக்க விதத்தில் உயர்கல்வியை உயர்த்திய ஒப்பிலா முதலமைச்சராகத் திகழ்ந்தவர்தான் கலைஞர்!



## காதல்!

பன்னீரிலே குளித்துப் பழரசத்திலே நீந்தி, கன்னியர் புடை சூழக் கட்டிலறைக்குச் சென்றால்தான் வருவேன் என்று சொல்வதல்ல காதல் ! காதல் ஒரு நிலவு; அது ஒரு தென்றல் ! மாளிகைக்கு மட்டுமல்ல, மண் குடிசைக்கும் வரும். காதல், பணமல்ல; உன் பளிங்கு மண்டபத்தோடு நின்றுவிட !

- கலைஞர்